ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், முருங்கதொழுவில் அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், ஆர்.காந்தி ஆகியோர் சிறிய அளவிலான கைத்தறி பூங்கா அமைக்கும் பணி துவக்கி வைத்து, காளிக்காவலசு தொடக்க மற்றும் தொழிலியல் சங்கத்தில் மெல்லிய மெத்தை தைக்கும் இயந்திரத்தின் செயல்பாட்டினை துவக்கி வைத்தனர். நிகழ்வில் அரசு செயலர் (கைத்தறி மற்றும் கைத்திறன், துணிநூல் , கதர் துறை) வே.அமுதவள்ளி, (இயக்குனர்) மகேஸ்வரி ரவிக்குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, இணை இயக்குனர் (கைத்தறி) கணேசன், உதவி இயக்குனர் (கைத்தறி துறை) சரவணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சேலம் கிழக்கு மாவட்டம் தலைவாசல் கால்நடை பராமரிப்பு ஆராய்ச்சி மைய வளாகத்தில், பசுமை தமிழ் நாடு இயக்கத் திட்டத்தின் கீழ், ஆத்தூர் வனக்கோட்டம் சார்பில், 100 நாவல் மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது. இதில் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் எம்பி. கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டு பணிகளை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஆத்தூர் கோட்ட வனஅலுவலர் ரவிக்குமார், உதவி வனகாப்பாளர் சிவபெருமான், ஆத்தூர் வனசரகர் அலுவலர் ரவிபெருமாள், கிழக்கு மாவட்ட துணை செயலாளர் சின்னதுரை, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், ஒன்றிய செயலாளர்கள் பழனிசாமி, பாலமுருகன், அழகுவேல், மற்றும் தி.மு.க.வினர், வனத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

டி.மோகன்தாஸ் முன்னிலை! ரூ.98.96 இலட்சம் மதிப்பீட்டில் – இடைக்கழிநாடு பேரூராட்சி

கடப்பாக்கம் - கப்பிவாக்கம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டிடம்!

க.சுந்தர் எம்.எல்.ஏ. – க.செல்வம் எம்.பி. – பனையூர் மு.பாபு எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினர்!

செய்யூர், செப். 26 - செங்கல்பட்டு வருவாய் மாவட்டம், மதுராந்தகம் கல்வி மாவட்டம், செய்யூர் வட்டம் இடைக்காழிநாடு பேரூராட்சி, கடப்பாக்கம் - கப்பிவாக்கம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு திட்டத்தின் கீழ் 98.96 இலட்சம் மதிப்பீட்டில் நான்கு வகுப்பறைகள் கொண்ட புதிய கட்டிடம் கட்ட அடிக்கல் நாட்டு விழா 20.09.2025 சனிக் கிழமை பகல் 12.30 மணி அளவில் நடைபெற்றது.

பள்ளி தலைமை ஆசிரியை எஸ்.பங்கஜம் சிறப்பு விருந்தினர்களை வரவேற்றார்.

பேரூர் செயலாளர் டி.மோகன்தாஸ் முன்னிலை வகித்தார்கள்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் - உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், செய்யூர் சட்டமன்ற உறுப்பினர் பனையூர் மு.பாபு, மதுராந்தகம் கல்வி மாவட்டம், மாவட்டக் கல்வி அலுவலர் கி. காளிதாஸ், முதன்மை கல்வி அலுவலரின் நேர் முக உதவியாளர் (இடைநிலை) சு.சிவகுமார், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் ஆ.இராஜசேகரன், கடப்பாக்கம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியை மேரிலிண்டா, பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி அடிக்கல் நாட்டினார்.

மேலும் இவ்விழாவில் சித்தாமூர் ஒன்றிய பெருந் தலைவர் வி ஏழுமலை, பாலையூர் ஊராட்சி தலைவர் பா.ஏ.சிற்றரசு, செல்வி சம்யுக்தா அய்யனார், சா. இனியரசு மாவட்ட மீனவ ராணி அமைப்பாளர் பாரத், மாவட்ட மாணவ ரணி அமைப்பாளர் டைகர் குணா, அவைத் தலைவர் ஏ.அருணா, பொருளாளர் சசிக்குமார்,

பேரூர் துணைச் செயலாளர் ரஞ்சித்குமார், சங்கர் சாந்தி, முருகேசன், ஒன்றிய நிர்வாகிகள் கே.ஏ. ஜெயராமன், வெடால் ஐயப்பன், பக்தவச்சலம், ரஞ்சன் (எ) வஜ்ஜிரவேல், ஜெ சங்கர், சரவணன், முருகதாசன், அருள்நிதி, கெஜா, மு கண்ணன், லோகநாதன், நல்லூர் சக்திவேல், காஜாமொய்தீன், முசாதிக், மன்ற உறுப்பினர்கள் மோனிஷா, சகாதேவன் மணிவண்ணன், முனுசாமி, அன்னப்பன், சௌகத் ராமச்சந்திரன், ஷண்முகம், ராமலிங்கம், கண்ணப்பன், ராஜமுத்து , காத்தவராயன், பஷீர் தேவா, திருமலை, எல்.கே. எஸ்.பாபு, வழ.சுரேஷ், முருகன், சோழராஜன், இளைஞர் அணி ரிப்பாய் , தினேஷ், அப்துல் மாலிக் மற்றும் கழக உடன் பிறப்புகள் திரளாக கலந்து கொண்டனர்.

16 வார்டு, கப்பிவாக்கம் பேரூராட்சி மன்ற உறுப்பினர் பொறியாளர் பெ. ஜெயலட்சுமணன் (எ) பிரபு நன்றி கூறினார்.

நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில், நடைபெற்றf மாவட்ட அளவிலான கண்காணிப்புக்ககுழு முதற்கட்ட கூடத்தில் மாவட்ட ஆட்சியர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில் அரசு தலைமை கொறடா கா.ராமசந்திரன் அரசு துறை அதிகாரிகளுடன் கலந்தாய்வு மேற்கொண்டார். உடன் உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ் மற்றும் அரசு துறை அதிகாரிகள் உள்ளனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பி.வி.எஸ். வெங்கடேசன்

செப்டம்பர் 25 (2024)

தனது இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

ஒருங்கிணைந்த தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நகரச் செயலாளர், ஒன்றியச் செயலாளர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்ட அவைத்தலைவர் ஆகிய பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

காவேரிப்பட்டினம் கூட்டுறவு சங்கத் தலைவர், நகர வங்கித் தலைவர், பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் ஆகிய பொறுப்பு வகித்தவர்.

1996ஆம் ஆண்டு காவேரிப்பட்டினம் சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று அப்பகுதி மக்களுக்கு பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

பசுமை தமிழ்நாடு இயக்க தினத்தை முன்னிட்டு வனத்துறையின் சார்பில் மரக்கன்றுகள் நடும் பணியினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் சேலம், அரியானூர் அரசு சட்டக்கல்லூரி வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, முன்னிலையில் தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட வன அலுவலர் கஷ்யப் ஷஷாங்க் ரவி, வன உதவி பாதுகாவலர் (பயிற்சி) திருமதி லாவண்யா, சட்டக்கல்லூரி முதல்வர் திருமதி துர்காலட்சுமி உட்பட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் உள்ளனர்.

கரூர் மாவட்ட தி.மு.க. இளைஞரணி ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்று மண்டல இளைஞர் அணி பொறுப்பாளர் என்ற முறையில் மண்டல மாநாட்டிற்கு சிறப்பாக இளைஞர்களை அழைத்து வருவது குறித்து விளக்கம் அளித்தார். கரூர் மாவட்டக் கழக செயலாளர் செந்தில் பாலாஜி தலைமையில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் மாநில இளைஞர் அணியின் துணைச்செயலாளர் முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது.

'பசுமை தமிழ்நாடு' இயக்கத்தின் மூலம்

சேலம் மாவட்டத்தில் 8,23,700 மரக்கன்றுகள் நடுவதற்கு இலக்குகள்!

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

சேலம், செப். 26 - பசுமை தமிழ்நாடு இயக்க தினத்தை முன்னிட்டு வனத்துறையின் சார்பில் மரக்கன்றுகள் நடும் பணியினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் சேலம், அரியானூர் அரசு சட்டக்கல்லூரி வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி முன்னிலையில் தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சிக்குப்பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் வனப்பரப்பை அதிகரித்திடவும், பசுமை போர்வையை விரிவுபடுத்திடவும் பசுமை தமிழ்நாடு இயக்கத்தினைத் தொடங்கி வைத்தார்கள். பசுமை தமிழ் நாடு இயக்கத்தின் நோக்கமானது மொத்த நிலப் பரப்பில் மூன்றில் ஒரு பகுதி நிலத்தை வனப்பரப்பாக மாற்றுவதாகும். அந்தவகையில், இன்றையதினம் பசுமை தமிழ்நாடு இயக்க தினத்தை முன்னிட்டு வனத்துறையின் சார்பில் மரக்கன்றுகள் நடும் பணியானது சேலம், அரியானூர் அரசு சட்டக் கல்லூரி வளாகத்தில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பசுமை பரப்பை அடுத்த 10 ஆண்டுகளுக்குள் 33 சதவீதமாக உயர்த்தும் நோக்கில் பல் வேறு திட்டங்கள் மூலம் மரக்கன்றுகள் நடவுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி பசுமை தமிழ்நாடு இயக்கத்திட்டமானது (GTM) 2022 ம் ஆண்டு முதல் மரக்கன்றுகள் உற்பத்தி மற்றும் நடவுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது இயக்கம் துவங்கப்பட்டு 3ம் ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி பசுமை தமிழ் நாடு இயக்க தினத்தை கொண்டாடும் வகையில் பசுமைப்பரப்பை அதிகரிக்கும் பொருட்டும், மரக்கன்றுகள் நடுவதன் அவசியத்தை குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக சேலம் மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் மூலம் மரக்கன்றுகள் நடவுசெய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மண் வளத்தை மேம்படுத்த (soil enrichment), உயிர் பல்வகை தன்மையை அதிகரிக்க (Strengthening Bio diversity). பாரம்பரிய நாவல் பழத்திற்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் இத்தினத்தன்று நாவல் மரங்களை அதிகளவில் நடவுசெய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு தற்போது பல்வேறு இடங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றது.

சேலம் மாவட்டம் 5,205 சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது. இந்த மொத்த பரப்பளவில் 1,717.65 சதுரகிலோ மீட்டர் அதாவது 33 சதவிகிதம் பசுமை நிலப் பரப்பளவாக உருவாக்கப்பட வேண்டும். ஆனால், தற்பொழுது சேலம் மாவட்டத்தில் 1,331 சதுர கிலோ மீட்டர் பசுமைப் பரப்பளவாக, அதாவது 28 சதவிகிதமாக உள்ளது. இதனை 33 சதவிகிதமாக அதிகரிக்க இன்னும் 386.65 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு தேவைப்படுகிறது. அடுத்த 10 ஆண்டுகளில் இந்த இலக்கினை அடைய வேண்டும்.

இதற்கு ஆண்டுக்கு 38.67 சதுர கிலோ மீட்டரை வனப் பரப்பளவாக கொண்டுவர வேண்டும்.

நடப்பாண்டு நாவல், புங்கன், புளியன், கொடுக்காபுளி, பரம்பை, ஆயன், மகோகனி, பூவரசு, நீர்மருது, சொர்கம், பலா, அத்தி, வேங்கை, தேக்கு, சில்வர் ஓக், மகிழம், மலைவேம்பு உள்ளிட்ட இனங்களில் ரூ.8,23,700 எண்ணிக்கையிலான மரக்கன்றுகள் நடுவதற்கு இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு இன்றையதினம் முதல் பல்வேறு துறைகளின் மூலமாக நடப்படுகிறது.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில் பசுமைப் போர்வையை இலக்காகக் கொண்டு சேலம் மாவட்டத்தினை 33 சதவிகிதம் வனப் பரப்பளவாகத் திகழச் செய்யும் வகையில் அனைத்துத் தரப்பினரும் இதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும். இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

முன்னதாக பள்ளி மாணவ, மாணவியர்களிடையே சுற்றுச்சுழல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும் மற்றும் மரக்கன்றுகள் நடுதலை ஊக்குவிக்கும் வகையிலும் பல்வேறு பள்ளிகளில் நடத்தப்பட்ட வினாடி வினா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார்கள்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட வன அலுவலர் கஷ்யப் ஷஷாங்க் ரவி, வன உதவி பாதுகாவலர் (பயிற்சி) திருமதி லாவண்யா, வன சரக அலுவலர் துரைமுருகன், சட்டக்கல்லூரி முதல்வர் திருமதி துர்காலட்சுமி உட்பட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

கோவை, பீளமேடு, அண்ணாநகரில் உள்ள மாநகர் மாவட்ட அலுவலகத்தில் மாநகர் மாவட்ட பகுதிப் பொறுப்பாளர்கள், மாநகர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர் சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, துரை.செந்தமிழ்ச் செல்வன், மா.நாகராஜ், ஏ.எஸ்.நடராஜ், சிங்கை மு.சிவா, இரா.சேரலாதன், ப.மோகன்ராஜ், ப.பசுபதி, வ.ம.சண்முகசுந்தரம், பரணி கே.பாக்கியராஜ், கே.எம்.ரவி, எ.ம்.கிருஷ்ணராஜ், இலா.தேவசீலன், கஸ்தூரி அருண், ஆர்.எம்.சேதுராமன், டெம்போ சிவா, சிங்கை அன்பு, கோவை லோகு, மாநகர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இரா.தனபால், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ஆர்.கே.சுரேஷ்குமார், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் திருமலைராஜா உள்பட பலர் கலந்து கொண்டனர்.